## 2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர் @ பூந்தமல்லி

**முன்னிலை : திருமதி.கு.புவனேஸ்வரி, பி.எல்.,**
**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருவள்ளூர் @ பூந்தமல்லி**
**2026 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 30 ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**Criminal Revision Petition No.17/2025**

**CNR No.TNTR08-000203-2025**

| | | |
|---|---|---|
| எந்த நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் தண்டனைக்கு எதிராக இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது | : | குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்.2, பூந்தமல்லி. |
| விசாரணை நீதிமன்ற வழக்கு எண். | : | **M.C. No.4/2018** |
| குற்றவியல் மேல்முறையீட்டு வழக்கு எண் | : | **CRLR No.17/2025** |
| மேல்முறையீட்டாளர் / எதிர்மனுதாரரின் பெயர் மற்றும் விபரங்கள் | : | திரு. ஈஸ்வரி பிரசாத், வயது 42,<br>த/பெ. எம். ராமநாதன்,<br>எண்.317, மோகன் ராம் நகர்,<br>முகப்பேர்,<br>சென்னை – 600 037. |
| எதிர்மேல்முறையீட்டாளர் / மனுதாரர் | : | 1. திருமதி. ஜி. சுகுணா யோகலஷ்மி (எ) யோகலஷ்மி, வயது 40<br>த/பெ. டி. கோவிந்தசாமி<br>2. மைனர் D. சாய் விக்னேஷ், வயது 6<br>த/பெ. ஈஸ்வரி பிரசாத்,<br>அவருக்காக தாயார் / காப்பாளர் 1 வது மனுதாரர், 1121, டிஎன்எச்பி மெயின் ரோடு, ஆவடி, சென்னை – 600 054. |

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.07.02 22:43:22 +0530

| | | |
|---|---|---|
| விசாரணை நீதிமன்றத்தால் பகரப்பட்ட உத்தரவின் விபரம் | : | இம்மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்பட்டது. |
| மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்புரை | : | முடிவாக, இம்மேல்முறையீடு தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. விசாரணை நீதிமன்றம் M.C.No.4/2018 ல் 26.07.2024 அன்று வழங்கிய உத்தரவு உறுதி செய்யப்படுகிறது. |
| மேல்முறையீடு தாக்கல் செய்த நாள் | : | 27.08.2024 |
| மேல்முறையீடு கோப்புக்கு எடுத்த நாள் | : | 16.04.2025 |
| முன்னிலையான நாள் | : | 12.06.2024 |
| வாதுரை செய்யப்பட்ட நாள் | : | 04.06.2026 |
| தீர்ப்பு பகரப்பட்ட நாள் | : | 30.06.2026 |

இம்மேல்முறையீடு 04.06.2026 அன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மேல்முறையீட்டாளர்/ எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் M/s. P.V.S. கிரிதர், Y. கவிதா, ஷனாஸ் ஃபாத்திமா, D. பிரசன்னா, T. மிதுன் மற்றும் S. சிவசங்கரி ஆகியோர் முன்னிலையாகியும், எதிர்மேல்முறையீட்டாளர்/மனுதாரர் தரப்பில் M/s. R.P. விஜயரங்கன், S. மோகன்ராஜ் மற்றும் R.அனுமந்தராவ் ஆகியோர் முன்னிலையாகியும், தரப்பினர்கள் ஏற்று நடத்திய இவ்வழக்கில் இருதரப்பு வாதங்களைக் கேட்டும், விசாரணை நீதிமன்றத்தில் முன்னிடப்பட்ட வாய்மொழி சாட்சியம், சான்றாவணம்

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.07.02 22:43:28 +0530

மற்றும் மேல்முறையீட்டுக்கான அடிப்படைக் காரணங்கள் ஆகியவற்றை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

**<u>தீர்ப்புரை</u>**

குற்றவியல் மேல்முறையீடு குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்.2, பூந்தமல்லி அவர்களால் 26.07.2024 அன்று M.C.No.4/2018 ல் வழங்கப்பட்ட தீர்ப்புரையை ரத்து செய்து இம்மேல்முறையீட்டை அனுமதிக்கக் கோரி மேல்முறையீட்டாளர்/ எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>விசாரணை நீதிமன்றத்தில் எதிர்மேல்முறையீட்டாளர் / மனுதாரர் தாக்கல் செய்த குற்ற முறையீட்டின் சுருக்கம் பின்வருமாறு</u>:-**

1 வது மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் 01.09.2011 தேதியன்று, வடபழனி ஓட்டல் "கிரீன் பார்க்" என்ற இடத்தில், இந்து மத வழக்கப்படி உறவினர்கள் மற்றும் நண்பர்கள் முன்னிலையில் திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு பின்பு எதிர்மனுதாரர் குடும்பத்தினர், 1 வது மனுதாரரை, "அதிகமாக வரதட்சணை கொண்டு வரவில்லை" என்று சொல்லி, அதிக வரதட்சணை கேட்டு மிரட்டி வந்தனர். எதிர்மனுதாரரின் குடும்பத்தினர் செய்யும் கொடுமைகளை எதிர்மனுதாரர் அமைதியாக பார்த்துக் கொண்டிருந்தார். 1 வது மனுதாரர் கர்ப்பம் அடைந்த சூழ்நிலையில் எதிர்மனுதாரரின் குடும்பத்தினர் கட்டாயத்தின் பேரில், எதிர்மனுதாரர் விவாகரத்து வழக்கு எண்.83/2013 ஐ தாக்கல் செய்தார். 1 வது மனுதாரரும் எதிர்மனுதாரரும் 2 1/2 மாதங்கள் மட்டுமே சேர்ந்து வாழ்ந்தனர். அவர்களுக்கிடையில் எந்த ஒரு மன வேறுபாடும்

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.07.02 22:43:33 +0530

இல்லை. இருந்தும், எதிர்மனுதாரரின் பெற்றோரின் வற்புறுத்தலால், விவாகரத்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. போதுமான அளவில் சீதனம், வரதட்சணைகள் கொடுக்கப்பட்டிருந்தும், கூடுதலாக, "ரூ.10 லட்சம் பணமும், கார் ஒன்றும்" கேட்டு கொடுமைகள் செய்து வந்தனர். அவற்றைக் கொடுக்க முடியாததால், 1வது மனுதாரரை வீட்டிலிருந்து வெளியேற்றி விட்டனர். விவாகரத்து வழக்கில் 1வது மனுதாரர் மது குடிப்பதாக குறிப்பிட்டுள்ளார். அவரை "கேஸ்" என்று எதிர்மனுதாரரின் தாயார் அழைத்தார். 1வது மனுதாரர், எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ, மண வாழ்க்கையை மீட்டளிக்க கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர் "சாஃப்ட்வேர்" நிறுவனத்தில் 20 ஆண்டு காலம் பணிபுரிந்து, மாதம் ரூ.5 லட்சம் அளவிற்கு வருமானம் ஈட்டுகிறார். இத்தனை ஆண்டுகளில் பணி உயர்வு பெற்று, அதிக வருமானம் பெற்று சொத்துக்களை வாங்கி வைத்து மகிழ்ச்சியாக வாழ்கிறார். மனுதாரர்களுக்கு முழுவதுமாக பண உதவி எதுவும் செய்யாமல் புறக்கணித்துவிட்டார். 1வது மனுதாரர் வேலை எதுவும் இல்லாமல், 2வது மைனர் மனுதாரரை வளர்த்துக்கொண்டு கவனித்து வருகிறார். அவரின் தந்தைக்கு 85 வயதும், தாயாருக்கு 77 வயதும் ஆன நிலையில் குழந்தையை 1வது மனுதாரரே முழுவதுமாக கவனித்துக் கொள்ள வேண்டிய சூழ்நிலையில் இருந்து வருகிறார். எனவே, எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு தலா ரூ.1 லட்சம் மாதாந்திர ஜீவனாம்சத் தொகையாக செலுத்த உத்தரவிட வேண்டும் என்று கோரியுள்ளனர்.

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.07.02 22:43:37 +0530

3. <u>விசாரணை நீதிமன்றத்தில் மேல்முறையீட்டாளர்/எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்:–</u>

மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் மறுக்கப்படுகின்றன. 1வது மனுதாரர் எதிர்மனுதாரருடன் மொத்தமாக 73 நாட்கள் மட்டுமே ஒன்றாக வாழ்ந்தார். அதில் 65 நாட்கள் பூந்தமல்லியில் கழிந்தது. பூந்தமல்லியில் இருந்தபோது 1வது மனுதாரர் எதிர்மனுதாரரை கொடுமைகள் செய்து வந்ததால், விவாகரத்து கோரி எச்.எம்.ஓ.பி.எண்.83/2013 என்ற எண்ணில் வழக்கு தொடுத்துள்ளார். 1வது மனுதாரர் கர்ப்பம் அடைந்ததோ 2வது மனுதாரர் பிறந்ததோ எதையும் தெரியப்படுத்தவில்லை. 1வது மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும், 01.09.2011 தேதியன்று வடபழனி ஓட்டல் "கிரீன் பார்க்கில்" திருமணம் நடந்தது உண்மை. 1வது மனுதாரர் வீட்டில் திருமணம் நடந்து, 2 தினங்கள் தங்கி இருந்த காலகட்டத்திலேயே, அவரது சுயரூபத்தை காட்டினார். அதிகம் படித்தவர் என்பதால் அவர் உயர்வானவர் என்கிற எண்ணத்துடன் இருந்தார். அதனால் சுமூகமாக எதிர்மனுதாரருடன் கலந்து கொள்ள முடியவில்லை. 04.09.2011 தேதியன்று, 1வது மனுதாரரும், எதிர்மனுதாரரும் எதிர்மனுதாரரின் வீட்டிற்கு முதலில் வந்தனர். அன்றே எதிர்மனுதாரருடன் புரிதலுடன் இருக்கவில்லை. எதிர்மனுதாரரை "காபி கொண்டு வரும்படி" சொல்வதும், "போதையில் இருப்பதுமாக" இருந்து வந்தார். பகலிலேயே மது குடிக்கும் பழக்கம் வைத்திருந்தார். எதிர்மனுதாரரையும் குடிப்பதற்கு வற்புறுத்தினார். எதிர்மனுதாரரை மனதளவிலும், உடலளவிலும் கொடுமைகள் செய்து வந்தார். விடியற்காலை 5.00 மணி வரை டிவி

G
BHUVANESWARI
Digitally signed
by G
BHUVANESWARI
Date: 2026.07.02
22:43:41 +0530

பார்ப்பதும், அதன் பிறகு தூங்குவதும், எதிர்மனுதாரர் வீட்டை விட்டு அலுவலகத்திற்கு போன பிறகு விழிப்பதுமாக இருந்து வந்தார். அவருடைய முதல் கணவருடன் எதிர்மனுதாரரை ஒப்பீடு செய்து மன உளைச்சலை ஏற்படுத்தி வந்தார். எதிர்மனுதாரரையும் அவரது குடும்பத்தினரையும், குடும்ப வன்முறை சட்டத்தில் வழக்கு போட்டு விடுவதாக சொல்லியும் தற்கொலை செய்து கொள்வதாக சொல்லியும் மிரட்டி வந்தார். ஏற்கனவே அம்பத்தூரில் ஐடி நிறுவனத்தில் வேலை செய்த போது மாத்திரைகள் சாப்பிட்டு தற்கொலைக்கு முயன்றுள்ளார். பூந்தமல்லியில் இருந்து வரும் போது விமான நிலைய நிலையத்தில் "எஸ்கலேட்டரில்" இருந்து குதித்து தற்கொலை செய்து கொள்ளப்போவதாக மிரட்டினார். அவரை சமாதானப்படுத்தி எதிர்மனுதாரர் அழைத்து வந்தார். 12.11.2011 தேதியன்று, 1 வது மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் "டால்மியாபுரம் கெஸ்ட் ஹவுஸில்" திருச்சியில் தங்கி இருந்தனர். அப்போது எதிர்மனுதாரரை "ரம்யா" என்பவரது மஞ்சள் நீராட்டு விழா நிகழ்ச்சிக்கு போகக்கூடாது என்றும், அவரும் வர மறுத்தும் மன உளைச்சலை ஏற்படுத்தி, கொடுமைகள் செய்தார். அவரது உறவினர்களை அழைத்து சமாதானப்படுத்தி, வேறு வழி இல்லாமல் அன்றே 1 வது மனுதாரரை அழைத்து வந்து, அவரது பெற்றோர் வீட்டில் விட்டார். அது முதலே, 1 வது மனுதாரர் அவருடைய நடவடிக்கைகளை மாற்றிக் கொள்ளாமல், அவரது பெற்றோர் வீட்டிலேயே தங்கி இருக்கிறார். அவர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ முன் வரவில்லை. 17.11.2011 தேதியன்று, "அண்ணா நகர்" காவல் ஆய்வாளர் என்று சொல்லி ஒருவரை வைத்து பஞ்சாயத்து பேசினார், 1 வது மனுதாரர்,

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.07.02 22:43:45 +0530

அவரது பிடிவாத குணத்தை விடவில்லை. இதனால் எதிர்மேல்முறையீட்டாளர் / மனுதாரர் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரருக்கு வேலை எதுவும் இல்லாமல் "ஃப்ரீ லான்சராக" வேலை செய்து கடன்களை கட்டி வருவதால் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்று கோரியுள்ளார்.

**4**. விசாரணை நீதிமன்றத்தில் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.9 வரை சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.21 வரை சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. விசாரணை நீதிமன்றம் முழுமையான விசாரணைக்குப் பிறகு மனுதாரர்களுக்கு பராமரிப்பு தொகை வழங்கி உத்தரவிட்டதில் மனக்குறைவுற்ற எதிர்மனுதாரர் இந்த குற்றவியல் மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார்.

**5. <u>மேல்முறையீட்டாளர் / எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேல்முறையீட்டுக்கான காரணங்களின் சுருக்கம்:-</u>**

விசாரணை நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு சட்டத்திற்கும் உண்மைகளுக்கும் முரணானது முதல் எதிர்மேல்முறையீட்டாளர் (d) உயர்கல்வி பெற்றவர் (IIM, கல்கத்தாவில் BE பட்டம் பெற்றவர்), வெளிநாடுகளுக்கு பயணம் செய்தவர், HCL நிறுவனத்தில் பணியாற்றியவர் மற்றும் மாதம் ரூ.1,00,000/- வரை வருமானம் பெற்றதாக ஒப்புக்கொண்டவர். எனவே அவர் தன்னைத் தானே பராமரிக்கும் திறன் கொண்டவர். முதல் எதிர்மனுதாரருக்கு அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் இருப்பதாக ஒப்புக்கொண்ட நிலையில், அவருக்கு

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.07.02 22:43:49 +0530

பராமரிப்பு தொகை வழங்க உத்தரவிட்டுள்ளது தவறானது. முதல் எதிர்மனுதாரர் தன்னிச்சையாக திருமண வீட்டை விட்டு வெளியேறி மேல்முறையீட்டாளரை கைவிட்டுள்ளார். எனவே குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 125(4)–ன் கீழ் அவர் பராமரிப்பு கோர தகுதியற்றவர். இருவரும் பிரிந்து வாழ்ந்து 7 ஆண்டுகளுக்குப் பிறகே முதல் எதிர்மனுதாரர் வழக்கு தொடர்ந்துள்ளார். இடைக்கால பராமரிப்பு கோரி எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லை என்பதால், அவரிடம் போதுமான வருமான ஆதாரம் இருந்தது என எதிர்மறை முடிவு எடுக்கப்பட்டிருக்க வேண்டும். மேலும், வரதட்சணை கொடுமை, கூடுதல் வரதட்சணை கோரிக்கை அல்லது குடும்ப வன்முறை தொடர்பாக மேல்முறையீட்டாளர் அல்லது அவரது பெற்றோருக்கு எதிராக எந்த புகாரும் அளிக்கவில்லை. முதல் எதிர்மனுதாரர் திருமணத்திற்கு முன்பும் பின்பும் தனது உடல்நிலை தொடர்பான தகவல்களை மறைத்துள்ளார். மனஅழுத்தம் தொடர்பான மருந்துகளை உட்கொண்டதாகவும், மேலும் முதல் கணவரின் நினைவில் இருந்ததாகவும் மேல்முறையீட்டாளர் தரப்பில் கூறப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளர் தனது வயதான பெற்றோர்களான திரு. ராமநாதன் (81 வயது) மற்றும் திருமதி சுலோச்சனா ராமநாதன் (74 வயது) ஆகியோரை கவனித்து வருகிறார். ஒரே மகனாக அவர்களை பராமரிக்கும் பொறுப்பும் அவருக்கு உள்ளது. 2013 முதல் திருமணத் தகராறு தொடர்பான வழக்குகள் நிலுவையில் இருப்பதால், மேல்முறையீட்டாளரின் தொழில் மற்றும் வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. முதல் எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளருடன் மொத்தம் 73 நாட்கள்

G
BHUVANESWARI
Digitally signed
by G
BHUVANESWARI
Date: 2026.07.02
22:43:54 +0530

மட்டுமே வாழ்ந்துள்ளார். அந்த காலகட்டத்தில் மேல்முறையீட்டாளரே மன மற்றும் உடல் ரீதியான துன்புறுத்தலுக்கு உள்ளானார். முதல் எதிர்மனுதாரர் தனது மனுவில் மேல்முறையீட்டாளர் மாதம் ரூ.5,00,000/– சம்பாதிப்பதாக கூறியிருந்தாலும், குறுக்கு விசாரணையில் அவர் பணிபுரிந்த நிறுவனத்தின் பெயரே தெரியாது என்றும், அதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை என்றும் ஒப்புக்கொண்டுள்ளார். முதல் எதிர்மனுதாரர் IIM பட்டதாரி, வேலை வாய்ப்புகள் உள்ளவர், முன்பு வேலை செய்து நல்ல வருமானம் பெற்றவர் என்ற நிலையிலும், திருமணத்திற்குப் பிறகு வேலை தேட எந்த முயற்சியும் எடுக்கவில்லை. முதல் மனுதாரர் வெறும் குற்றச்சாட்டுகளை மட்டுமே முன்வைத்துள்ளார், அதனை நிரூபிக்க போதுமான ஆதாரங்கள் தாக்கல் செய்யவில்லை. எனவே விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவு சட்டப்படி நிலைக்க முடியாதது. எனவே, விசாரணை நீதிமன்றம் பிறப்பித்த பராமரிப்பு உத்தரவை ரத்து செய்து, முதல் எதிர்மனுதாரரின் பராமரிப்பு கோரிக்கையை நிராகரிக்க வேண்டும்.

**6. <u>தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை</u>:–**

குற்றவியல் மேல்முறையீட்டு வழக்கு அனுமதிக்கத்தக்கதா? என்பதாகும்.

**<u>பிரச்சனை</u>:–**

**7.** இருதரப்பும் கேட்கப்பட்டது. விசாரணை நீதிமன்ற ஆவணங்கள், சாட்சியங்கள் மற்றும் மேல்முறையீட்டின் அடிப்படைக் காரணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.07.02 22:43:58 +0530

8. மேல்முறையீட்டாளர் / எதிர்மனுதாரருக்கும் 1ம் எதிர்மேல்முறையீட்டாளர் / 1ம் மனுதாரருக்கும் 01.09.2011 தேதியன்று, சென்னை வடபழனி கிரீன் பார்க்" ஓட்டலில் திருமணம் நடைபெற்றது என்பதும் 2வது மனுதாரர் முதல் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் பிறந்த மகன் என்பதும், எதிர்மனுதாரர் தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்ட பொருண்மையாகும்.

9. மேல்முறையீட்டாளர் / எதிர்மனுதாரர் தரப்பில் 1வது மனுதாரர் "குடிப்பழக்கம் வைத்திருக்கிறார்" என்றும் ஏற்கனவே முதல் கணவரிடம் விவாகரத்து பெறும் போது, இந்த குடிப்பழக்கம் ஒரு பிரச்சனையாக இருந்துள்ளதாகவும் பகலிலேயே குடித்துவிட்டு போதையில் இருப்பதாகவும், வீட்டு வேலை செய்வதில்லை என்றும் தூக்கி எறிந்து பேசுவதாகவும் மன நோயாளியாக உள்ளதாகவும், அதற்கு சிகிச்சை எடுத்துக் கொள்ள மறுப்பதாகவும் தற்கொலை செய்து கொள்ள போவதாக மிரட்டுவதாகவும், சுமுகமான முறையில் ஒரு மனைவியாக குடும்பம் நடத்த ஒத்துழைக்கவில்லை என்றும் வேறு வழி இன்றி அவரை அவரது வீட்டில் கொண்டு சென்று விட்ட பிறகு அவரே சேர்ந்து வாழ முன்வரவில்லை என்றும் குழந்தை பிறந்ததையும் சொல்லவில்லை என்றும் 1ம் எதிர்மேல்முறையீட்டாளர் / 1ம் மனுதாரர் மீது குற்றச்சாட்டுகள் கூறப்பட்டு முதல் எதிர்மனுதாரர் IIM பட்டதாரி, வேலை வாய்ப்புகள் உள்ளவர் என்றும் முன்பு வேலை செய்து நல்ல வருமானம் பெற்றவர் என்றும் திருமணத்திற்குப் பிறகு வேலை தேட எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.07.02 22:44:02 +0530

**10.** எதிர்மேல்முறையீட்டாளர் / மனுதாரர் தரப்பில் மேல்முறையீட்டாளர் / எதிர்மனுதாரர் குடும்பத்தினர் வரதட்சணை அதிகமாக கேட்டு கொடுமை செய்தார்கள்" என்றும் அவரையும், அவரது குடும்பத்தினரையும் "முறையாக நடத்தாமல் திட்டுவதும் அவமானப்படுத்துவதுமாக கொடுமை செய்து வந்தார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**11.** விசாரணை நீதிமன்றத்தில் மனு சங்கதிகளை நிருபிக்கும் பொருட்டு 1 வது மனுதாரர், முதல் விசாரணை பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்து தன்னை ம.சா.1 ஆக விசாரித்துக்கொண்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.9 வரையான சான்றாவணங்களை குறியீடு செய்துள்ளார். 01.09.2011 தேதிய திருமணப் பத்திரிக்கை ம.சா.ஆ.1 ஆகவும், திருமணத்தின்போது எடுக்கப்பட்ட புகைப்படம் ம.சா.ஆ.2 ஆகவும், 05.07.2012–ம் தேதிய 2 வது மனுதாரரின் பிறப்புச் சான்றிதழ் ம.சா.ஆ.3 ஆகவும், 2012–2016 வருடத்து மருத்துவ ரசீதுகள் ம.சா.ஆ.4 ஆகவும், 2015, 2016, 2017 பள்ளி கட்டண ரசீதுகள் ம.சா.ஆ.5 ஆகவும், ஹெச்.எம்.ஓ.பி.47/15 உண்மை நகல் ம.சா.ஆ.6 ஆகவும், எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரை ம.சா.ஆ.7 ஆகவும், ஹெச்.எம்.ஓ.பி.83/2013–ல் மனு உண்மை நகல் ம.சா.ஆ.8 ஆகவும், இதில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்ருரை ம.சா.ஆ.9 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**12.** மேல்முறையீட்டாளர் / எதிர்மனுதாரர் தரப்பில், எதிர்மனுதாரர் தன்னை எ.ம.சா.1 ஆக முதல் விசாரணை பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்து விசாரித்துக்கொண்டு எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.21 ஆக திருமண அழைப்பிதழ் எ.ம.சா.ஆ.1 ஆகவும், 1 வது மனுதாரரின் முதல் கணவர் அருண்குமார் என்பவரது வங்கி பாஸ்புக் எ.ம.சா.ஆ.2 ஆகவும்,

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.07.02 22:44:05 +0530

அவரின் காசோலை புத்தகம் எ.ம.சா.ஆ.3 ஆகவும், அவரின் மதுரை எஸ்.பி.ஐ வங்கியின் பாஸ்புக் புத்தகம் எ.ம.சா.ஆ.4 ஆகவும், எதிர்மனுதாரரின் குடும்ப அட்டை எ.ம.சா.ஆ.5 ஆகவும், 1வது மனுதாரர் அவரது முதல் கணவருக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு எ.ம.சா.ஆ.6 ஆகவும், 1வது மனுதாரர் முதல் கணவர் தாக்கல் செய்த விவாகரத்து வழக்கு மனு எ.ம.சா.ஆ.7 ஆகவும், அதில் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிர்ருரை எ.ம.சா.ஆ.8 ஆகவும், 16.08.2011 தேதிய விமான பயணச்சீட்டு எ.ம.சா.ஆ.9 ஆகவும், ஓட்டல் கட்டண ரசீது எ.ம.சா.ஆ.10 ஆகவும், 17.10.2011 தேதிய விமான பயணச்சீட்டு எ.ம.சா.ஆ.11 ஆகவும், 17.09.2011 தேதிய விமான பயணச்சீட்டு எ.ம.சா.ஆ.12 ஆகவும், 1வது மனுதாரரின் மருத்துவர் பிரிஸ்கிரிப்ஷன்ஸ் எ.ம.சா.ஆ.13 ஆகவும், விமான பயண சீட்டு ரத்து ரசீது எ.ம.சா.ஆ.14 ஆகவும், 10.11.2011 தேதிய விமான பயண சீட்டு எ.ம.சா.ஆ.15 ஆகவும், 1வது மனுதாரரின் "ஆன்சைட்டி நியூரோசிசிஸ்" சம்பந்தமாக மருத்துவ ஆலோசனை ஆவணங்கள் எ.ம.சா.ஆ.16 ஆகவும், 1வது மனுதாரரின் தந்தை எதிர்மனுதாரரின் தந்தைக்கு 13.04.2018 தேதியன்று அனுப்பிய கடிதம் எ.ம.சா.ஆ.17 ஆகவும், 1வது மனுதாரரின் தந்தை எதிர்மனுதாரருக்கு அனுப்பிய 13.05.2018 தேதிய கடிதம் எ.ம.சா.ஆ.18 ஆகவும், 1வது மனுதாரரின் தந்தை எதிர்மனுதாரர் தந்தைக்கு அனுப்பிய 29.05.2012 தேதிய கடிதம் எ.ம.சா.ஆ.19 ஆகவும், 1வது மனுதாரரின் வீட்டு புகைப்படங்கள் எ.ம.சா.ஆ.20 ஆகவும், 1வது மனுதாரரின் தந்தையின் வீட்டின் புகைப்படங்கள் எ.ம.சா.ஆ.21 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.07.02 22:44:09 +0530

**13**. விசாரணை நீதிமன்றத்தில் மேல்முறையீட்டாளர் எ.ம.சா.1 ஆக தனது குறுக்கு விசாரணையின் போது "கணவன் என்ற முறையில் மனைவி மற்றும் மகனை பராமரிக்க வேண்டிய கடமை எனக்கு இருக்கிறதா? என்றால் உள்ளது" என ஒப்புக்கொண்டுள்ளார். விசாரணை நீதிமன்றத்தில் எதிர்மேல்முறையீட்டாளர் / மனுதாரர் மாதாந்திர ஜீவனாம்சத் தொகையாக ரூ.2 லட்சம் வழங்க உத்தரவிட கோரியுள்ளனர். ஆனால், ரூ.2 லட்சம் எவ்வகையில் அவர்களுக்கு தேவைப்படுகிறது என்பதைப் பொருத்து மனுவில் விளக்கமேதும் தெரிவிக்கப்படவில்லை. 1ம் மனுதாரரால் 2வது மனுதாரருக்கு பள்ளி கட்டணங்கள் செலுத்தியதற்கான ரசீதுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதில் 2015–ல் ரூ.5000/– ரூ.9400/– ரூ.9400/– ரூ.9400/– என ஒரு வருடத்திற்கு கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளது. 2ம் மனுதாரரான தனது மகனுக்கு பராமரிப்பு தொகை செலுத்த மேல்முறையீட்டாளர் / எதிர்மனுதாரர் மறுக்கவில்லை. ஆனால் முதல் எதிர்மேல்முறையீட்டாளர்/1ம் மனுதாரர் உயர்கல்வி பெற்றவர் (IIM. கல்கத்தாவில் BE பட்டம் பெற்றவர்). வெளிநாடுகளுக்கு பயணம் செய்தவர். HCL நிறுவனத்தில் பணியாற்றியவர் மற்றும் மாதம் ரூ.1,00,000/– வரை வருமானம் பெற்றதாக ஒப்புக்கொண்டவர். எனவே அவர் தன்னைத் தானே பராமரிக்கும் திறன் கொண்டவர் என்றும் முதல் எதிர்மனுதாரருக்கு அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் இருப்பதாக ஒப்புக்கொண்ட நிலையில், அவருக்கு பராமரிப்பு தொகை வழங்க உத்தரவிட்டுள்ளது தவறானது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.07.02 22:44:13 +0530

**14.** விசாரணை நீதிமன்றம் இருதரப்பினரும் ஒருவரை ஒருவர் பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள் என்கிற நிலையில் மேல்முறையீட்டாளர் / எதிர்மனுதாரர் தனக்கு ரூ.50,000/– அளவிற்கு வருமானம் வருவதாக தெரிவித்துள்ளதையும், சொத்து மற்றும் கடன் விவர பட்டியல் தாக்கல் செய்துள்ளதில் அவருக்கு தனிப்பட்ட செலவு ரூ.25,000/– ஏற்படுவதாகவும், ரூ.16,000/–, ரூ.41,000/– கடன் கட்டுவதாகவும் தெரிவித்துள்ள சங்கதியை பார்க்கும் போது, எதிர்மனுதாரருக்கு மனுதாரர்களை பராமரிக்க போதுமான வருவாய் ஆதாரம் உள்ளதாகவும் அதேபோல், நல்ல திடகாத்திரமான உடல்நிலை கொண்ட கணவன் போதுமான வருமானம் வரவில்லை என்று மனைவி குழந்தைகளை பராமரிக்க வேண்டிய சட்டப்படியான கடமையிலிருந்து விடுவித்துக் கொள்ள முடியாது என்றும் எனவே எதிர்மனுதாரர் 1வது மனுதாரருக்கு மாதாந்திர ஜீவனாம்ச தொகையாக ரூ.10,000/– –மும், 2வது மைனர் மனுதாரருக்கு மாதாந்திர ஜீவனாம்சத் தொகையாக ரூ.15,000 –மும், அவர் உரிமை வயது எட்டும் வரையிலும் ஒவ்வொரு மாதமும் 5ம் தேதிக்குள் தவறாமல் செலுத்தி வர வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது சரியானதே என்றும் விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவில் தலையிட முகாந்திரம் ஏதும் இல்லை என்றும் இந்நீதிமன்றமும் முடிவு செய்து மேல்முறையீட்டை தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கிறது.

முடிவாக, இந்த மேல்முறையீடு தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. விசாரணை நீதிமன்றம் M.C.No.4/2018 ல் 26.07.2024 அன்று வழங்கிய உத்தரவு உறுதி செய்யப்படுகிறது.

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.07.02 22:44:17 +0530

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்து சரிபார்க்கப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.07.02 22:44:24 +0530

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**<u>நகல்:</u>**

குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்.2, பூந்தமல்லி

**<u>வரைவு/தெளிவு தீர்ப்புரை</u>**
**Criminal Revision Petition No.17/2025**
நாள்.30.06.2026
**2 வது கூ.மா.அ.நீ**
**பூந்தமல்லி**